# நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொறுப்பு), திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி அவர்களின் நடவடிக்கைகள்

**பிறப்பிப்பவர் : திருமதி ஆ. மணிமேகலை, B.E.,**

ந.க. எண் 20/2020 திலிம 3 நாள் 21.03.2020

**பொருள் :** அனுமதியற்ற மனைப்பிரிவுகள் / மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - திருநெல்வேலி மண்டலம் - தூத்துக்குடி மாவட்டம்- கயத்தார் வட்டம் - கயத்தார் பேரூராட்சி - கயத்தார் கிராமம் - சர்வே எண் 626/7D, 9A, 9B pt, 629/1, 2, 143/4-ல் 32550.00 ச.மீ (8.04 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

**படிக்க :**

1. அரசாணை எண் 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 04.05.2017.
2. அரசாணை எண் 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 13.10.2017
3. அரசாணை எண் 55, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 02.05.2018
4. அரசாணை எண் 21, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (UD4(3)) துறை, நாள் 05.02.2019
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 13193/17 எல்ஏ 2, நாள் 30.10.2017, 31.10.2017, 03.11.2017, 07.11.2017, 17.11.2017, 20.12.2017 மற்றும் 07.01.2019
6. மனுதாரர் திருமதி நபிஷா என்பவரது இணையதள பதிவு எண் DTCP/L/163376/2017, இவ்வலுவலகத்தில் விண்ணப்பம் பெறப்பட்ட நாள் 03.01.2020 மற்றும் 19.03.2020
7. அரசாணை எண் 100, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 01.07.2019
8. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 16.03.2020
9. சாலை மற்றும் பூங்கா ஒப்படைப்பு சார்பதிவாளர், கயத்தார், தூத்துக்குடி மாவட்டம் அலுவலக தானபத்திரம் எண் 656/2020, நாள் 19.03.2020
10. அரசாணை எண் 166, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 29.11.2018 (Insisting TNRERA Registration)

---------

**ஆணை**

பார்வை 1, 2, 3 மற்றும் 4-ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 5-ல் கண்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படியும், பார்வை 6-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் வட்டம் , கயத்தார் பேரூராட்சி, கயத்தார் கிராமம் சர்வே எண் 626/7D, 9A, 9B pt, 629/1, 2, 143/4-ல் 32550.00 ச.மீ (8.04 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 7-ல் கண்டுள்ள அரசாணையின் படி, பார்வை 8-ல் கண்ட 16.03.2020 நாளிட்ட கடிதத்துடன் அனுப்பப்பட்ட சாலை மற்றும் பூங்கா அமைப்பு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, பார்வை 9-ல் கண்ட தானபத்திரம் எண் 656/2020, நாள் 19.03.2020-ல் சாலை மற்றும் பூங்கா பகுதியினை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருநெல்வேலி-க்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து, அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ (மு)/ம.(திலி) எண் 20/2020** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | - 32550.00 ச.மீ (8.04 ஏக்கர்) |
| மனைகளின் மொத்த எண்ணிக்கை | - 141 (1 to 40, 40A, 41 to 139) |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | - 46 |
| விற்கப்பட்ட மனை எண்கள் | - 1 to 9, 12 to 35, 37 to 40, 41, 42, 44 to 50 |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | - 95 |
| விற்கப்படாத மனை எண்கள் | - 10, 11, 36, 40A, 43, 51 to 139, Shop - 1 |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | - 15567.14 சமீ |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு | - 1603.76சமீ (10.30%) |

பூங்கா 1 பரப்பு - 1603.76 சமீ (மனுதாரரால் ஒதுக்கீடு செய்யப்பட்டது)
(தானபத்திரம் எண் 656/2020, நாள் 19.03.2020-ன் படி சாலை மற்றும் பூங்கா பகுதியினை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருநெல்வேலிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது)

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்**

1. **பரிசீலனைக்கட்டணம்**

| | | |
|---|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக்கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | : | மனை எண் 58, 66 ரூ.1000/- |

பரிசீலனைக்கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பைபாஸ்ரோடு கிளை, திருநெல்வேலி இவ்வலுவலக வங்கி கணக்கு எண் 10481947367-ல் செலுத்தப்பட வேண்டும்.

2. **வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம்**

பார்வை 4-ல் கண்டுள்ள அரசாணையின் படி வரன்முறைப்படுத்தும் கட்டணமும் மற்றும் வளர்ச்சிக்கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.75/- வீதம் கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

**அ. வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத்தலைப்பு**

0217 Urban Development – 60 Other Urban Development Scheme-800.Other receipts AT Receipts under Regularisation charges of Unapproved layout and Plots –DTCP
27 Non Taxation Fees – 30 Regularisation
(DPC 0217 60 800 AT 2730)

ஆ. வளர்ச்சிக்கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக்கண்க்கில் நேரில் செலுத்தலாம்.
வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் -------------------------

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னர் சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2-ல் சுட்டிய அரசாணைகளின் படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

21/3/2020

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
21/3/20 திருநெல்வேலி - 5.
21/3/20

**இணைப்பு**

மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்

**பெறுநர்**

செயல் அலுவலர்
கயத்தார் பேரூராட்சி
தூத்துக்குடி மாவட்டம்

**நகல்**

1. திருமதி நபிஷா, 8, ஜெயாநகர், ஹைகிரவுண்ட், திருநெல்வேலி - 11 (செயலாணை மட்டும்)
2. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவுருக்கள் துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தூத்துக்குடி மாவட்டம் (சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு)
3. சார்பதிவாளர், கயத்தார், தூத்துக்குடி மாவட்டம் (சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு)
4. செயலாளர் (திட்டம்), தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் (TNRERA), 1ஏ, காந்தி இர்வின் பாலம் ரோடு முதல் தளம், எழும்பூர், சென்னை
5. தொழில் நுட்ப வைப்பறை

தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு முதல் நிலைப் பேரூராட்சி செயல் அலுவலர் செயல்முறைகள்

முன்னிலை : திரு. த. ஜோதிபாஸ், B.Com

நாள்: 30 .11.2020

ந.க.எண். 126 /2020

பொருள் மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் – பேரூராட்சிகள் நிர்வாகம் – தூத்துக்குடி மாவட்டம் – கயத்தாறு வட்டம் – கயத்தாறு பேரூராட்சி – சர்வே எண் 626/7D, 9A, 9Bpt, 629/1,2, 143/4ல் 32550 ச.மீ / 8.04 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள விற்கப்படாத குடியிருப்பு மனைகள் மற்றும் கடை ஒன்றிற்கு வரன்முறை வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக

பார்வை 1. நகர ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) , திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.20/2020 திலிம3. நாள்.21.03.2020

2. இப்பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.499 நாள்.27.10.2020

3. திருமதி.நபிஷா, 8, ஜெயா நகர், ஹைகிரவுண்ட், திருநெல்வேலி அவர்களின் பரிசீலனை கட்டணம், வரன்முறை கட்டணம், வளர்ச்சி கட்டணம் செலுத்திய செலவு சீட்டுகள் நாள்.16.11.2020 மற்றும் 17.11.2020.

-----

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு வட்டம், கயத்தாறு பேரூராட்சி சர்வே எண்.626/7D, 9A, 9Bpt, 629/1,2, 143/4ல் 32550 ச.மீ / 8.04 ஏக்கர் பரப்பளவு கொண்ட காலியிடத்தில் விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை 95ஐ பார்வை 1ன் படி திருநெல்வேலி மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) அவர்களின் கொள்கை அளவிலான ஒப்புதலை ஏற்று பார்வை 2ன் படி இப்பேரூராட்சியில் மனை வரன்முறைப்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பார்வை 3ன் படி மனுதாரர் பரிசீலனை கட்டணமாக கனரா வங்கி, கயத்தாறு கிளையில் பேரூராட்சி கணக்கில் ரூ.56000/– செலுத்தியுள்ளார். வளர்ச்சி கட்டணமாக இந்தியன் ஓவர்சிஸ் வங்கி கயத்தாறு கிளையில் ரூ.696802/– பேரூராட்சி சேமிப்பு கணக்கில் செலுத்தியுள்ளார். வரன்முறை கட்டணமாக அரசு கணக்குத்தலைப்பில் ரூ.418081/– செலுத்தி செலுத்துச்சீட்டு இணைத்துள்ளார்.

பார்வை 1ல் காணும் நடவடிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி தான பத்திரம் எண்.656/2020 நாள்.19.03.2020 சாலை மற்றும் பூங்கா பகுதியினை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் திருநெல்வேலிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு உதவி இயக்குநர் நில அளவை தூத்துக்குடி அவர்களுக்கு நகலிடப்பட்டுள்ளது. மேலும் கயத்தாறு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சாலை மற்றும் திறந்தவெளி பகுதியினை பதிவு செய்ய நகலிடப்பட்டுள்ளது.

எனவே மனுதாரர் விற்கப்படாத மனைகளான 10,11,36, 40ஏ, 43, 51, முதல் 131 முடிய மற்றும் கடை 1 உட்பட மொத்தம் பரப்பளவு 15567.14 ச.மீட்டர் நடவடிக்கை நகலில் நிபந்தனைகளுக்குட்பட்டு இப்பேரூராட்சியால் வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்படுகிறது.

30.11.2020

செயல் அலுவலர்,
பேரூராட்சி அலுவலகம்,
கயத்தாறு – 628952
தூத்துக்குடி மாவட்டம்.

30.11.2020

இணைப்பு :–

1) அங்கீகரிக்கப்பட்ட வரைபடம்– ஒன்று

பெறுநர்

திருமதி. நபிஷா,
8, ஜெயா நகர்,
ஹைகிரவுண்ட்,
திருநெல்வேலி–11

நகல் :–

1. நகர் ஊரைமப்பு துணை இயக்குநர் அவர்கள், நகர் ஊரமைப்பு துறை அலுவலகம், திருநெல்வேலி மண்டலம் தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவுருக்கள் துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தூத்துக்குடி மாவட்டம் அவர்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள பணிந்து நகல் சமர்ப்பிக்கப்படுகிறது.
3. சார்பதிவாளர் , கயத்தாறு , தூத்துக்குடி மாவட்டம் அவர்களுக்கு கயத்தாறு பேரூராட்சியின் பெயரில் சாலை மற்றும் திறந்தவெளி பகுதியினை பதிவு செய்து தர நகல் அனுப்பப்படுகிறது.